**துருசவிய நிதியம் - 2021**

1. **நிதிக்கூற்றுக்கள்**

1.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

துருசவிய நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 **நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்குகளை வைத்திருத்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்..

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகத்துடன் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான

வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியம் தொடர்ந்தியங்குவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது முடிவுரைகளானது கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் மீதான அடிப்படையிலானதாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும்

உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துவேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறிப்பிட்ட நியமங்களின் தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முற்றாகாப் பெறுமானத் தேய்விடப்பட்டிருந்ந கிரயம் மொத்தம் ரூபா 1,548,645 ஆன காணிகள், அலுவலக உபகரணங்கள், அலுவலகத் தளபாடம் மற்றும் இயந்திரங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருவதுடன், இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நிதியம் 07 இன் 92 ஆம் பந்தியின் பிரகாரம் பயனுள்ள ஆயட்காலம் கருத்திற் கொள்ளப்பட்டு மீள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் வருடத்தில் திருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கைப் பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க முழுமையாகத் தேய்மானமிடப்பட்டு முடிக்கப்பட்டுள்ள இறுதிச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் கருத்திற் கொள்ளப்பட்டு மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பொதுத் திறைசேரியிடமிருந்து மூலதனமாக ரூபா 16,844,125 பெறப்பட்டிருந்த போதும் நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 18,000,000 ஆனது வருமானமாக மற்றும் திறைசேரியிடம் பெற வேண்டியதாக ரூபா 1,155,874 காட்டப்பட்டிருந்த போதிலும், இப்பெறுமதி உழைக்கப்பட்ட பெறுமதியொன்று அல்ல. | எமது நிறுவனத்தால் வருடத்திற்காக பொதுத்திறைசேரியிடம் ரூபா 18,000,000 கோரப்பட்டிருந்தது. மேலும், திறைசேரிப் பணிப்பாளர் நாயகத்தினால் (பொது முயற்சிகள் நடவடிக்கைகள்) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாதீட்டில் எமது நிறுவனத்தின் மூலதனச் செலவுகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட தொகை ரூபா 18,000,000 ஆக இருந்தது. இக்காரணத்தினால் பெறவேண்டிய தொகை அட்டுறு அடிப்படையில் அட்டுறு வருமானமாக கணக்கிடப்பட்டுள்ளது. | பொதுத்திறைசேரியிடம் மூலதனமாக பெறப்படுகின்ற பெறுமதி கணக்கிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் துருசவிய சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பால் கறக்கும் அலுமினியத் தட்டுக்கள், இறப்பர் பால் சேகரிக்கும் பிளாஸ்டிக் கோப்பைகள் மற்றும் கோப்பை தாங்கிகள் திசெம்பர் 31 இல் இருப்புப்பதிவேட்டில் முறையே 248, 73628 மற்றும் 63,195 அலகுகளாக முன் கொண்டு வரப்பட்டிருந்தன. எனினும், ரூபா 2,652,715 ஆன அந்த அலகுகளின் மொத்தப்பெறுமதி திசெம்பர் 31 இல் இறுதி இருப்பாக நிதிக்கூற்றுகளில் காட்டப்படாது செலவுகளாக நிதிச்செயலாற்றல் கூற்றில் சீராக்கப்பட்டிருந்தது. | இந்த இருப்புக்கள் 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்படாமையால் இவ்வாறாக மிகுதி இருப்புக்கள் காணப்படுதல் நிதிச் செயலாற்றலுக்கு மற்றும் அதன் முன்னேற்றத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவதால் மற்றும் அந்த இருப்பு பணம் செலுத்தப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் அரசின் செலவுகள் குறைவாக அறிக்கையிடப்படும் வகையில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்க கணக்கிடப்பட்டிருந்தது. | பகிர்ந்தளிக்கப்படாத இருப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் இறுதி இருப்பாகக் காட்டப்பட வேண்டும். |
| (இ) | கடந்த வருடத்தில் நிதியத்திற்கு சனாதிபதிச் செயலகத்திடமிருந்து பெறப்பட்ட 7 மோட்டார் வாகனங்களின் பெறுமதி அவ்வருடத்தில் சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படாதபோது , மோட்டார் வாகனப் பெறுமானத்தேய்வு ஒதுக்கம் ஆரம்ப மீதியாக ரூபா 40,000 மற்றும் அப்பெறுமதி திரண்ட நிதியத்தில் ஆரம்ப மீதிக்கு சீராக்கப்பட்டிருந்தது. | இம்மோட்டார் வாகனத்திற்கான கிரயம் சொத்துக்கள் கணக்கிற்கு 2021 ஆம் வருடத்தில் உள்ளடக்கப்பட்டு 2021 ஆம் வருடத்திற்கான தேய்மானம் சரியாக 2021 ஆம் வருடத்தில் செலவுக்கணக்கிற்கு உள்ளடக்கப்பட்டிருந்தது. இது 2020 ஆம் வருடத்தின் திசெம்பர் மாதம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்தொன்று என்பதால் 2020 ஆம் வருடத்தில் புத்தகங்களில் அறிக்கையிடப்பட வேண்டியிருந்தது. இது புத்தகக் காப்பாளரின் தவறொன்றால் ஏற்பட்டிருந்தமையால் 2021 ஆம் வருடத்தில் திருத்தப்பட்டுள்ளது. | கடந்த வருடத்தில் மோட்டார் வாகனம் கணக்கிடப்படாமையால் தேய்மானச் சீராக்கம் செய்யப்பட வேண்டியதில்லை. |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-------------------------------------------------------------------------------

### 1.6.1 பெற வேண்டிய பணம்

---------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி மற்றும் கம்பஹா ஆகிய 04 மாவட்டங்களில் 30 துருசவிய சங்கங்களுக்கு தரைத்தராசு,இறப்பர் | இது தொடர்பாக சுமார் நான்கு முறை குடியிருப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் | கடனை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | வைரச் சுருள்கள் என்பவற்றை கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட கடன் தொகையில் ரூபா 826,109 ஆன பெறவேண்டிய பகுதியொன்று 05 வருட காலமாகக் காணப்படுவதுடன் அறவிடப்படாது காணப்பட்டது. அத்துடன் சங்கங்கள் மீளாய்வாண்டு வரையில் செயற்பாட்டில் இருந்தனவா என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அத்தொகையில் பெரும்பகுதியை மீளப்பெற முடியுமான போதிலும் உரிய கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள மீதித்தொகை இதுவரை அறவிடப்படுவதற்கு முடியாதிருந்தது. அதன் பிரகாரம் மீண்டும் ஒருமுறை இது தொடர்பாக முயற்சி எடுப்பதற்கு அல்லது அறவிட முடியாக் கடனாக பதிவளிப்பதற்கு நிர்வாக சபைக்கு சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2008 மார்ச் 03 ஆந் திகதிய 1/2008 ஆம் இலக்க திறைசேரிச் செயற்பாடுகள் சுற்றறிக்கை | அரச வங்கிகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் முதிர்ச்சியடைகின்ற போது இடைக்கால முதலீடுகளிற்காக இலங்கை மத்திய வங்கி மற்றும் திறைசேரியினால் செலுத்தப்படும் வட்டி வீதத்திற்கு உட்பட்டு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிகளிற்கு வங்கி வைப்புக்களில் அல்லது திறைசேரி பிணை முறிகளில் மீள் முதலீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 2017 ஆம் வருடத்திலிருந்து 06 மாத குறுகிய வைப்புக்களில் அரச வங்கிகளில் முதலீடுகள் செய்யப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் முதலீடுகளின் தொகை ரூபா 9,656,585 ஆகும். | இது 2022 ஆம் வருடத்தில் திருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | திறைசேரியால் வெளியிடப் பட்டுள்ள சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பணம் முதலீடு செய்யப்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு மீளாய்வு ரூபா 3,543,063 ஆன மிகை என்பதுடன் அதற்கொத்த முன்னைய வருடத்தின் மிகை ரூபா 3,222,288 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 320,775 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம்முன்னேற்றத்திற்கு நிதியத்தின் புகை மண்டல மானிய செயற்திட்டத்திற்கான செலவு ரூபா 9,963,463 ஆல் அதிகரித்த போதிலும் , அரச மானியங்கள் கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது ரூபா 11,133,916 ஆல் அதிகரித்திருந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் பால் வெட்டும் கத்திகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,700,000 ஆன நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் கத்திகள் கொள்வனவு செய்யப்படாததால் அந்நிதி ஏற்பாடுகள் முற்றாகச் சேமிக்கப்பட்டிருந்தது. அத்துடன் 15 துருசவிய சங்கங்களுக்கு 894 பால் வெட்டும் கத்திகளைப் பெற்றுக் கொள்வதற்காக 15 துருசவிய சங்க உறுப்பினர்களிடமிருந்து ரூபா 377,715 பெறப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படாமையால் அந்த உறுப்பினர்களுக்கு 2022 மே மாதம் வரையில் கத்திகளை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | 2021 செயல் நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் 4000 கத்திகள் கொள்வனவு செய்வதற்காக வழங்குநருடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், அவர் இந்தியாவிடமிருந்து அக்கத்திகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகளை எடுத்திருந்தமையால் நாட்டில் டொலர் பிரச்சினை காரணமாக அவருக்கு குறிப்பிட்ட திகதியில் கத்திகளை வழங்குவதற்கு முடியாதிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்தது. அதனால் கத்திகளைப் பெற்றுக் கொள்வது தாமதமாகியிருந்தது. | திட்டத்தின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்டு குறிப்பிட்டதன் பிரகாரம் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் துருசவிய சங்கங்களுக்கு 50 சதவீத மானியத்தின் கீழ் இறப்பர் பால் கறக்கும் அலுமினியத் தட்டுக்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 7000 தட்டுக்கள் ரூபா 4,191,250 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதில் 21 துருசவிய சங்க உறுப்பினர்கள் 6,752 தட்டுகளுக்களுக்காக ரூபா 2,021,925 ஆனது நிதியத்திற்கு செலுத்தியிருந்தனர். இருப்பினும் நிதியத்தினால் 2777 தட்டுக்கள் மட்டுமே பகிர்ந்தளிக்கப்பட்டு மிகுதி 4223 தட்டுக்கள் 2022 மே மாதம் வரை களஞ்சியத்தில் சேமிக்கப்பட்டிருந்தன. | 50 சதவீத மானிய அடிப்படையில் இறப்பர் விவசாயிகள் (துருசவிய சங்க உறுப்பினர்கள்) சார்பாக பெறப்பட்டிருந்த இறப்பர் பால் கறப்பதற்கான 7000 அலுமினியத் தட்டுகளுக்கான பணம் இற்றைவரை விவசாயிகளிடம் அறவிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மொத்தத்தட்டுக்கள் 7000 ஆன அளவில் 6,219 மாவட்டங்களில் துருசவிய சங்க உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன், மிகுதி எதிர்வரும் மாதத்தில் பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | மானிய அடிப்படையில் பெறப்பட்ட உபகரணங்கள் விரைவாகப் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத்திட்டத்தின் கீழ் தொழில் முறை பால் கறக்கும் திறனாளிகளுக்கு பயிற்சியளிப்பதற்காக ரூபா 1,400,000 ஆன நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கான மாவட்டம் மற்றும் பங்குபற்றுவதற்கு எதிர்ாபார்க்கப்படுகின்ற திறனாளிகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. கடந்த வருடத்தில் திட்டமிடப்பட்டு ஆனால் செயற்படுத்தப்படாத 03 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டிருந்தன. எனினும் அப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பங்குபற்றிய திறனாளிகளுக்கு வழங்குவதற்காக கடந்த வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 685,474 பெறுமதியான மின் விளக்குகள், கருவிப்பைகள், டீசர்ட்டுக்கள், கத்திகள் மற்றும் ஏனைய கருவி உபகரணங்கள் அப்பயிற்சிகளின் போது விநியோகிக்கப்படாத காரணத்தால் 2022 மே மாதம் வரையில் களஞ்சியத்தில் சேமிக்கப்பட்டிருந்தன. | நாட்டில் நிலவிய சாதகமற்ற சூழ்நிலை காரணமாக திட்டமிட்டப்படி பயிற்சியாளர்களின் சான்றிதழ்கள் மற்றும் உபகரணப்பெட்டிகளை விநியோகிப்பதற்கு முடியவில்லை. இதுவரை வெற்றிகரமாப் பயிற்சிகளை முடித்த அனைத்து பயிற்சியாளர்களுக்கும் உபகரணப் பெட்டிகள் மற்றும் சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்தது. | ஏதிர்பார்த்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக அனைத்து விபரங்களுடன் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் பயிற்சிகளின் விநியோகிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | துருசவிய நிதியத்தின் கீழ் 16 மாவட்டங்களில் 844 துருசவிய சங்கங்கள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை அவற்றில் 293 சங்கங்கள் செயலற்ற நிலைமையில் காணப்பட்டன. | கடந்த சில வருடங்கள் பூராகவும் சில பிரதேசங்களில் இறப்பர் பயிர்செய்கை நீக்கப்பட்டு வேறு பயிர்களுக்கு மாற்றப்பட்டமை, நகரமயமாக்கல் காரணமாக இறப்பர் காணிகள் காடழிப்பு போன்ற காரணங்களால் சில சங்கங்களின் உறுப்பினர்களின் அளவு குறைவடைவதுடன் அச்சங்கங்களின் செயற்பாடுகள் தொடர்பான பிரச்சினைகள் எழுந்துள்ளன. ஆனால் எதிர்காலத்தில் அவ்வாறான சங்கங்கள் மறுசீரமைப்பு செய்யப்பட்டு ஒன்றிணைக்கப்பட்டு செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | செயலற்ற சங்கங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2020 ஆம் வருடத்தில் சனாதிபதி செயலகத்திடமிருந்து நிதியத்திற்கு பெறப்பட்ட 65-0681 ஆம் இலக்க ஜீப் வாகனம் திருத்தப்படுவதற்காக கடந்த ஆண்டில் நவம்பர் மாதத்தில் கொழும்பு பிரதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட கராஜிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2022 மே மாதம் வரை அவ்வாகனத் திருத்த வேலைகள் முடிக்கப்பட்டு எடுத்து வரப்பட்டிருக்கவில்லை. | 2020 நவம்பர் மாதம் திருத்துவதற்காக கராஜிற்கு ஒப்படைக்கப்பட்ட 65-1090 ஆம் இலக்க ஜீப் வாகனம் திருத்தப்பட்டு (மீண்டும்) 2021 ஒக்டோபர் மாதம் நிறுவகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், அது பழுதடைந்திருந்தமையினால் மற்றும் சாரதியினால் அது பழுதடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தமையில் மீண்டும் கராஜிற்கு ஒப்படைக்கப்பட்டது. அதன் கொடுப்பனவுகள் நிறுத்தப்படுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன், மீண்டும் வாகனம் நிறுவகத்திற்கு கையளிக்கப்படாது கராஜில் வைக்கப்பட்டுள்ளது. | விரைவில் திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வாகனம் ஓட்டத்திற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த வருடத்தில் சனவரி மாதத்தில் நிதியத்திற்கு சனாதிபதி செயலகத்திடமிருந்து பெறப்பட்ட ரூபா 2,000,000 பெறுமதியான KW 3039 ஆம் இலக்க கார் வாகனம் ஓட்டப்படுவதற்கு முடியாதென்ற அடிப்படையில் இரண்டு வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக விளைவற்றதாகக் காணப்படுகின்றது. | குறிப்பிட்ட வாகனம் திருத்தப்படுவதற்கு போதியளவு நிதியொன்று ஒதுக்கப்படாமையால் திருத்தப்பட முடியாதிருந்தது. | வாகனம் திருத்தப்பட வேண்டும். |